பரதேசியம்

ஏடு 16 பக் 10.

3L
R6ண211,N18G8
N26.16.10.
210802

432

Regtered No. M. 2095.

ஓம்

...OF THE REGISTRAR OF ... 23 APR 1926 MADRAS

# ஞானோதயம்

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 16 } 1926-ஸு எப்ரல்-மீ 11உ { பகுதி 10.

பொருளடக்கம்.

1. ஜகத் உத்தாரணத்திரயம் ஸ்ரீமான் J கிருஷ்ண மூர்த்தியின் கன்வென்ஷன் பிரசங்கம் (மொழிபெயர்ப்பு) பத்திராதிபர் ...269
2. நாம் அவசியம் செய்யத்தகுந்தவேலை V. V. சிவ அவதானி ...279
3. மஹரிஷி ஒருவர் பிரமஞான சபையோருக்கு அனுப்பிய செய்தி (மொழிபெயர்ப்பு) P.R. சுந்தரராஜய்யர் ...287
4. மரணம் V. S. அருணாசலம் பிள்ளை ...297
5. குறிப்புகள் சமாசாரங்கள் ...299

சந்தா விபரம்:—

வருஷ சந்தா உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0, தனிப்பிரதி ரூ 0—2—0.

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு, எனங்குடி, தஞ்சாவூர் ஜில்லா.

போளம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

# சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

இப்பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 11உ வெளியாகி, அன்றையத்தினமே தபாலில் அனுப்பவேண்டிய நம் நேயர்களுக்கு, நேரில் எனங்குடி தபாலாபீஸில் போடப்படுகின்றபடியால், பத்திரிகை நம் நேயர்களுககுச் சரிவரச்சேராவிட்டால், அதற்கு நாங்கள் காரணர்களல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. நாங்கள் சந்தாத்தொகையை முன்பணமாகவே பெற்றுக் கொண்டு பத்திரிகையை அனுப்பி வருகிறோமாயினும், பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளத் தக்கவர்களென்று நம்பி சில கனவான்களுக்குப் பத்திரிகை அனுப்பியிருக்கிறோம். பிறகு அனுப்புவதாய் ஒப்புக்கொண்டு சில நண்பர் பத்திரிகையைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவ்விருவகை அபிமானிகளான நண்பர்களும் தயவு செய்து சந்தாத் தொகையை கால தாமதம் செய்யாமல் உடனே அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

3. பிரம்மஞான ஸபை மெம்பர்களாயுள்ளவர்கள் நாளது வருஷத்திய சந்தா ரூ 4ம் இதுவரையில் கொடுக்காமலிருந்தால் உடனே கொடுத்துவிடுவார்களென்று நம்புகிறோம். தாமதித்து அனுப்புவதால் மத்தியில் பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடுவார்களென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்:

4. நமது பத்திரிகை அதிகமாய்ப் பரவவேண்டுமென்ற உத்தேசத்துடன் சில நண்பர்கள் சிரத்தையெடுத்துக்கொண்டு உழைத்து வருகிறார்கள். அவர்கள் தயவுசெய்து இதுவரையில் சேர்ந்திருக்கிற சந்தாதாரர்களின் ஜாப்தாவும் சந்தா தொகையும் அனுப்புவார்களென்று நம்புகிறோம்

பத்திராதிபர்.

...E REGISTRAR OF BOO...
23 APR 1926
MADRA...

# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரிகம் முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| ஸஞ்சிகை 16 | 1926-ஞு ஏப்ரல்-மீ 11உ | பகுதி 10. |

உ

மெய்யான தன்மை விளங்கினல் யார்க்கேனும்
பொய்யான தன்மை பொருந்துமோ—வையாவே
மன்னு நீராசையின்னம் வந்ததல்ல வுன்னடிமை
யென்னுநிலை யெய்துமாறென்.

## *ஜகத் உத்தாரணத்திரயம்.

### II பிரபஞ்ச விசுவவித்யாலயம்.

வித்தையின் முக்கிய அபிப்பிராயம், உலக அநுபவத்திற்குப் பலவழிகளைத்திறந்து, வித்தியார்த்திக்கு தன் ஜீவியத்தின் பிரயோஜனத்தைச் சரியானபடி எடுத்துக்காட்டி, தனது தின ஒழுக்கங்களில் ஒழுங்கைப் பிரவேசிப்பதற்கு அவனைத் 'தயார்' செய்து, அவனைச் சுகியாகச்செய்வதாக இருக்கின்றது. இக்காலத்திய வித்தையின் வழிகளைப்பார்க்க

* பிரமவித்யா மஹாசபையின் ஜூபிலி மஹோத்ஸவ சமயம் அடையாற்றில் 25—12—1926 ல் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தியவர்கள் செய்த 'ஆங்கில உபந்யாஸச் சுருக்கம், பத்திராதிபரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

வித்தியா பாண்டித்ய முள்ளவனென்று ஒருவனைச் சொல்ல நாம் ஜாக்கிரதையா இருக்கவேண்டியிருக்கிறது. இப்போதைய வித்யாவந்தன் அனேக பரீக்ஷைகளில் தேறி, அனேக பட்டங்களைச் சம்பாதித்தவனாகி இருப்பானே ஒழிய, கட்[illegible]ட, ஸ்வானுபூதி யில்லாதவனும் தர்மலோபமுடையவனுமாகி, உன்னதமான விஷயங்களில்நம்பிக்கை இல்லாமல் தனத்தை ஆகிர்ஷிப்பவனாகித் தான் இதரர்களைவிடப் பெரியவனென்ற கொர்வத்தால் நிரம்பியுள்ளவனாக இருப்பான். இப்போதைய பள்ளிக்கூடங்களில் நிஜமான ஞானவிகாசத்திற்கு இடையூறுகள் உண்டாக்கப்பட்டு வருகின்றன. ஆத்மபோதத்தை யளிக்கும் ஸ்தானம் எங்கும் காணப்படவில்லை. ஜீவிதத்தைக்குறித்துத் தெரிந்துக்கொள்ளவேண்டிய அவசியமான விஷயங்களை அங்கெடுத்துச் சொல்லார்கள். உபாத்தியாயர்கள் யந்தரங்கள் பள்ளிக்கூடங்கள் பிரதிவருஷமும் நாற்றுக்கணக்காக வித்யார்த்திகளைத் 'தயார்' செய்யும் யந்தர ஸ்தானங்கள். மேலும், ஜீவியத்தைச் சாரமுள்ளதாகச் செய்யக்கூடியது சௌந்தரியமொன்றே; அந்த சௌந்தரியம் இப்பள்ளிக்கூடங்களில் நாசஞ்செய்யப்பட்டது. ஏதேனுமொரு பள்ளிக்கூடத்திற்குச்சென்று பார்ப்போமேயாகில், அங்கு, அப்பரிசுத்தம், அழுக்கு, செத்தை இவைகளகப்படும். முற்றிலும் உபாத்தியாயர் யதார்த்தமான ஞானம் லேசமும் இல்லாதவராகி இருப்பார். மேலும் கோரமான ராக்ஷதனுமிருப்பர். புஸ்தகங்களிலுள்ள விஷயங்களை யெல்லாம், எவ்விதமாகவோ ஒரு வழியில் சிஷ்யனது குடுக்கையில் எவ்வளவு கஷ்டப்பட்டாகிலும் அடைப்பதுவே உபாத்தியாயருடையமுக்கிய நோக்கம். சிறுவன் அதில் கொஞ்சம்பின்வாங்கினால், பிரம்பால் அடிக்கப்பட்டு, அதிகக் குரூரமாய்ப் பாதிக்கப்படுவான். அதற்குப் பலமென்னவெனின், பெரியவனான பின்னர் அவனும், அவனது உபாத்தியாயரைப்போலவே தயையற்றவனாகி, கோபியாயுமாவன்.

பிர்ம்மஞான சங்கத்தார் உலகமெங்கும், புதிய விசுவ வித்யாலயங்களையும், பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபிக்கப் போகி



றார்கள். அவைகளில் பிரேமை, கௌரவம், சௌந்தரியம், பிள்ளைகளுக்கு சுகம்—இவைகள் காணப்படும். மேலும், அங்கு வித்யார்த்திகள் தமது ஆசைகளையும், எண்ணங்களையும், நிக்கிரஹஞ்செய்து, அவைகளைப்பேதமற்ற உன்னத ஞானஸ்தானத்திற்குச் செல்லும்படிகளாக உபயோகிக்கக்கற்றுக்கொள்வார்கள்.

தோற்றங்கள், ஜனங்கள், ஜாதிகள், வர்ணங்கள், வர்க்கங்கள்—இவைகளெல்லாம் ஒரே புஷ்பம். அவைகளில் ஒவ்வொன்றும் பிரத்யேகமாய் ஒவ்வொரு இதழ். எல்லாம் சேர்ந்து ஒரே மலரென்ற ஏகத்வ பாவமிருத்தல்வேண்டும். பிள்ளைகள் தெளிவு உண்டாகி பரிசீலனை செய்வதற்கும், அனுபவிக்கக் கூடியதாயாவதற்கும், ஆலோசிக்கக் கூடியதாயாவதற்கும் தக்கவாறு இருக்கும் வண்ணம், அவர்கள் மனதிற்கு போதத்தையளிக்க வேண்டுமென பிர்மஞான சங்கத்தாரின் நோக்கம். சந்தோஷத்தோடு கூடி ஸேவை செய்வதற்கும் தியாகம்செய்வதற்கும், தக்கவாறு இருக்கும் வண்ணம் வித்தைகற்பித்தல் நிஜமான வித்தையின்வழி. பிர்மஞான சங்கத்தாரின் பாடசாலைகளில் இந்தப் புதிய வித்யா விதான தத்துவங்கள் அனுஸரிக்கப்படும். மேலும், பிள்ளைகள் உலக ஸேவைசெய்வதற்கு வேண்டிய பலத்தை ஸ்தூலசரீரத்திற்கு உண்டாக்குவித்தலுக்கும், அவர்கள் இஹலோகத்தை ஜயிக்கக் கூடியதாயாவதற்கும், சரியான வழியில் மதகர்மங்களை அறிந்து கொள்வதற்கும் கூடப்பிரயத்தனித்து வருகிறார்கள்.

## II.

பிஷப் அருண்டேல் அவர்கள் உபன்னியாஸம். அம்மா! சிநேகிதர்களே!

வித்தை விஷயமாய் நான் அனேகதடவை உபன்னியாசம் செய்தபோதிலும் இவ்விஷயமாய் இன்னும் சொல்லவேண்டிய அவசியம் இருக்கின்றது. உலகில் புதுவழியில் கல்விகற்பித்தல் வேண்டியிருக்கிறது. அதைக்குறித்து நாமிவ்விதம் பிரசங்கங்கள் செய்துகொண்டும், அப்பிரசங்கங்களை யனுசரித்து வேலைசெய்துகொண்டும் இருக்கின் ஜகத்

குரு நமக்கு மார்க்கத்தைக்காட்ட அவதரிக்கும்பொழுது, அவரை வரவேற்று கௌரவித்து, அவரது உபதேசங்களை அவலம்பிப்பதற்கு உலகம் சித்தப்பட்டுக்கொண்டிருக்கும். எனது அனுபவத்தால் நான் கண்டுபிடித்த சில கல்வி கற்பித்தலின் தத்துவங்களை நான் இப்பொழுது நிரூபணம் செய்யப்போகிறேன். அவைகளை நாமெல்லோரும் மனதில் இருத்திவைத்துக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும், அவைகளை நீங்கள் அங்கீகரிப்பீர்களேயாகில், அவைகளுக்குச் சகாயமுடையவர்களாகி, சந்தேகமற, பின்னடையாமல், நிற்பீர்களென்பதாய்க் கோருகிறேன். நான் சொல்வதைக் கேட்டுத் தலையயாட்டி "ஆம்! இதை சாதிப்பதெப்படி? இது என்காலத்தில் நடக்கும் காரியமன்று. இனி எப்படியோ! இன்று, நாளை ஆகக்கூடியதல்ல! வெகு நாட்களாகினும் லபிப்பது அன்று" எனச்சொன்னால் மாத்திரம் போதாது. பிர்ம்மஞான ஜீவித மறைத்தத்துவங்களைப் பார்க்கும் வழியிதன்று. முதலில், அதற்கு அவன் உறுதியான சங்கற்பமுடையவனாயிருப்பன். பின்னர், அவைகளை அவன் அனுஷ்டானத்தில் கொண்டுவர பிரயத்தனஞ்செய்வான். ஆனால் நித்திய ஜீவிதத்தில் அவ்வளவு உறுதி மிகவும் சாத்தியமென நான் சொல்வதில்லை. ஸ்திதி கதிகளுக்குள்பட்டு பிரவர்த்தித்தல் ஓர் ஓர்சமயம் அவசியமும், விவேகமும்கூட ஆகும். ஆனதால், மூலதத்துவங்களை மறவாமல், அவைகளை யனுஷ்டானத்திற்குக் கொண்டுவர இடைவிடாப்பிரயத்தனம் செய்தல் வேண்டும். சிலர் இந்ததத்துவங்கள் அனுஷ்டிக்க முடியாதவைகள் எனச்சொல்வார்கள். அது சரியன்று. அவை அனுஷ்டிக்கக் கூடியவைகள். பிர்ம்மஞான ஸமாஜத்தார் அவற்றை யனுசரிக்கிறார்கள். இப்பொழுது அனுசரித்து வருகிறார்கள். அவர்கள் இதுகாறும் செய்தது, இப்பொழுது செய்துகொண்டிருப்பது, உலகோர் நாளைக்குச் செய்யும்வண்ணம் புரோத்ஸாகப்படுத்த வேண்டும். அந்த புரோத்ஸாகத்தைக் கொடுப்பதற்குத் தகுந்தவர்கள் நாங்கள். நாங்கள் அதைக் கொடுப்பதற்காகவே யிருக்கிறோம். நாங்கள் இந்த ஸமாஜத்தில் அங்கத்தினர்களாக இருப்பது, உலகத்திற்



குச் சஹாயஞ்செய்வதற்கே ஒழிய, நாங்கள் மாத்திரம் செம்மைபடவன்று. வரப்போகும் காலத்திற்குத்தகுந்த ஸம்ஸ்காரங்களைச் செய்வதைவிட உலகத்திற்கு இப்பொழுது விசேஷஸஹாயம் அவசியமில்லை.

பிரபஞ்ச விசுவவித்யாலயம் முதல் முதல் பிர்ம்மஞான விசுவ வித்யாலயமாக விருக்கும். அதின் நிர்மாணவழி வர்ணனைகளில் உங்களைத் தாமதிக்கச்செய்யேன். எந்த கேந்திரஸ்தானத்திலாகிலும், அந்த விசுவவித்யாலய ஸம்மந்தமாயுள்ள பாடசாலைகளில் போதிக்க மேற்கொள்ளும் உபாத்தியாயர்களுக்கு எது முக்கிய லக்ஷணங்களாக இருக்கவேண்டுமென்று நியமிப்போமோ, எந்த லக்ஷணங்கள் இருக்கின் உபாத்தியாயர்கள் வித்யார்த்திகளிடம் அந்த லக்ஷணங்களை விகசிக்கச்செய்யக் கடவர்களோ, அந்த லக்ஷணங்களைக் குறித்துச் சொல்லுகிறேன்.

ஐரோப்பா கண்டமெங்கும் சஞ்சரித்தேன். பிரதேசங்களிலும் பெரிய வித்யாவழியை நிர்மாணஞ் செய்பவர்களெல்லோரும் பெரியதத்துவங்களை அங்கீகரித்துள்ளதாகத் தோன்றிற்று. முதல் வித்யாப்பியாஸம், முதல் வித்யாவிதானதத்வம், ஈசுவர நியமத்திற்குள்பட்டு, ஒரு பொதுவான முடிவிடத்தைச் சேர்தலுக்கு, கலந்து வளர்தல். இரண்டாவது, அந்தப்பொதுவான முடிவை அடையச்செய்யும் பொது நன்மையின் நிமித்தம் கலந்து கஷ்டசுகங்களை மேற்கொள்ளல் இவ்விரண்டு தத்துவங்களும் நமது பிரபஞ்ச விசுவ வித்யாலயத்திற்கு அஸ்திவாரமாக இருக்கவேண்டும். இந்தப் பிரதான தத்துவங்களல்லாமல் மற்றும் சிலவிருக்கின்றன. அவை யெவையெனின்—மேல் இரண்டு தத்துவங்களுக்கும் அனுபந்தமான ஜீவஏகத்வம். பிர்ம்மஞானசபை அங்கத்தினர்களான எங்களுக்கிந்த ஜீவனத்தின்வியக்தி சௌந்தரியமும், இந்த ஜீவனத்தின் பிரயோஜனத்திலுள்ள சௌந்தரியமும் தெரியும். இவைகளை உலகோர் அறியார்கள். எங்கள் பரிசோதனைகளாலும், எங்கள் ஆராய்ச்சிகளாலும், உலகில் இந்த விஷயங்கள் தெரியும்படி செய்யவேண்டியிருக்கிறது. இப்போதைய பாடசாலைகளில் ஜீவனத்தின் சௌந்தரிய அம்சத்

தைத்தவிர மற்றவைகளெல்லாம் காணப்படும். துக்கம், மூடத்தன்மை, குரூரம், தரித்திரம், ஆசை—இவைகள் காணப்படும். இவைகளுக்கு பதில் சௌந்தரியம் வியக்தமாகும்படிசெய்து, நம்தாக்தாருக்கு ஸாத்தியமாகாத வேலைகள், நமது பாலர்களால் செய்விக்கவேண்டியிருக்கிறது.

மூன்றாவது தத்வமென்னவெனின், புருஷார்த்த ஸாதனங்களாயுள்ள அந்த திவ்யசக்தி—அதைப் பிரகிருதியெனச் சொல்லுங்கள், கடவுளெனச் சொல்லுங்கள்--ஒரு அகண்டப் பிரேமையையும், அகண்ட தர்மத்தையும் அங்கீகரித்தல். இவ்விதமாக, ஈசுவர சங்கற்பம் நிறைவேறுவதற்கு நியமிக்கப்பட்ட கர்ம, புனர்ஜன்ம தர்மங்களால், இந்த ஸமஸ்த பூதங்களில் வியக்தமாகும் ஈசுவரனுடைய அற்புதமும், சுந்தரமும், பிரேமையுமாயுள்ள இச்சையைப்பார்போம். இந்த பிர்ம்ம ஞான பிரபஞ்ச விசுவ வித்யாலயத்தில், மேற்சொன்ன முதல்தத்துவமானஸாமான்யவிருத்திக்கு எதிரிடையாயுள்ள குரூரம், துன்மார்க்கம், விகாரம், பிழை—இவைகளைக்குறித்துத் தெரிந்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. விகாரம், துன்மார்க்கம், குரூரம்இவைகள் இருக்குமிடங்களில் அபிவிருத்தியிராது. ஸ்திரஸ்தம்பனமும் ஒருசமயம் தீனகதியும் உண்டாகும். அவலக்ஷணம், துன்மார்க்கம், குரூரம், இன்னும் இவைகளைப்போலொத்த கெட்டலக்ஷணங்களுக்கு வசமாவோமாகின், நாம் விருத்தியடையமாட்டோம். உபாத்தியாயர்களாகிய நாங்கள், அக்ஞானத்தினின்று ஆத்மஞானத்தைத் தெரிவிக்கும் ஏகத்வத்திற்கு வழியைத்தெரிந்துகொண்டு, எங்கள் சிஷ்யர்கள்கூட அதைக் கிரஹிப்பதற்குச் சஹாயம் செய்வோம். உபாத்தியாயர் அந்தப்பரிணாம மார்க்கத்தில் செல்லும் ஏகத்வத்தையறிந்து தனது அறிவாலேயே, தனது சிஷ்யர்கள் கூட அந்த ஏகத்வத்தை அறியும் வண்ணம் செய்வார். மனிதனைவிடக் கீழ்ஸ்திதியிலும், உன்னத ஸ்திதியிலுமுள்ள பலவிதங்களான பூதங்களெல்லாம் கூட அந்த ஸஹோதரத்வத்திற்குச் சேர்ந்திருக்கின்றன வென்பதாக, இப்பொழுது தெரியாதவிஷயம், அவருக்குத்தெரியும்.



மேலும் ஆத்ம நிரூபணம்--அதாவது நாம் ஆத்மாவெனத் தெரிந்துகொள்ளல். 2 ஆத்ம பிரகாசம்--அதாவது நாம் ஆன்மாவென வெளியிட்டுக்காட்டுதல். 3. ஆத்மதியாகம் அதாவது அந்த ஆன்மா தன்னைவிட பெரிதாயுள்ள பரமாத்மாவிற்காக சிரமப்படுதல். 4. ஆத்மஸமர்ப்பணம் [illegible] அந்த ஆத்மா பரமாத்மாவிற்குப் பூர்த்தியாக ஈடுபடுதல், 5. சித்தி, அதாவது ஜகத்திற்குஆதாரமும், ஸர்வாந்திரியாமியாயுமுள்ள ஏகத்வத்தை பிரத்தியக்ஷமாக அறிதல்--இந்தப் பஞ்சமஹா விருத்திக்கிரமம் எப்படி உண்டாயிற்றோ தெரிந்துகொள்வோம்.

210802

மேற்சொன்ன தத்துவங்களை சுருக்கமாய்ச் சொல்லவேண்டின் — தேடுவேன் கண்டுகொள்வேன், பங்கிட்டுக்கொள்வேன், என்னும் மூன்று வார்த்தைகளில் சொல்லக்கூடும். இதுவே இன்றைய தர்மலக்ஷணம். பிர்ம்மஞானப் பிரபஞ்ச விசுவ வித்யாலயத்தில், கலைகள், பௌதிக சாஸ்திரம், முதலாயுள்ள எவ்விஷயத்தையாகினும் கற்க ஏற்படுத்தப்படும் பாடக்கிரந்தங்களில் இந்த தத்துவங்கள் முக்கியமாய் கவனிக்கப்படும். இடைவிடா முயற்சியிருக்கவேண்டும். அதனால் எப்பொழுதும் கண்டுகொள்ளல் இருக்கும். ஆனால் முயற்சிக்காகட்டும், கண்டுகொள்வதற்காகட்டும் அவற்றோடு கலந்துள்ள ஸ்வரூபமான, பரம அனுபவம் கூட உண்டானால் ஒழிய, பக்தி உண்டாகமாட்டா. நீ இதரர்களுடன் எதைஸ்வேச்சையாகப் பங்கிட்டுக் கொள்வாயோ அதையே நீ நன்றாய்த் தெரிந்துகொள்வாயென்ற வாக்கியம் பரம ஸத்தியம். ஆனதால், இந்த விசுவ வித்யாலயத்தில், படிப்பிலும், விளையாட்டுகளிலும், பல சரீரங்களைப் பக்குவப்படுத்துதலிலும் கூட இம்மூன்று தத்துவங்களும் புதைந்திருக்கும்.

இது தெரிந்தபின்னர் பலவித வர்க்கங்களிலுள்ள பூதங்களும் பரஸ்பரஸம்மந்தத்தோடு காணப்படும். லோஹவர்க்கத்திற்கு முன்னேற்றம் மரம் செடி கொடி முதலிய வர்க்கமென்றும், அதற்கு முன்னேற்றம் ஜந்துவர்க்கமென்றும், அதற்கு முன்னேற்றம் மானிடவர்க்கமென்றும் தெரி

ந்து கொண்டு, பின்னர், மானிடவர்க்கத்திற்கு முன்னேற்றம் பரம புருஷவர்க்கமென்னும் நிச்சயமாய்த் தெரிந்து கொள்வோம். இவ்வித மஹாபரிணாம ஏணிகளின் மீது ஒவ்வொரு படிவரிசைக் கிரமமாக் ஏறிச்சென்று, முடிவில் மஹாசிகரத்தைப் பார்ப்போம். ஒவ்வொரு படியிலும் ஈசுவரனுடைய வியக்திஜீவனத்தையே பார்ப்போம். ஒரே ஜீவனம், ஒரே ஜன்மஸ்தானம், ஒரே பரம அவதி; அதனிடமே மஹாபிரேமை நிரம்பியிருக்கிறது. அதனிடமே இவ்வுலகை நியமிக்கும் மஹாதர்மம் நிரம்பி இருக்கின்றது.

உபாத்தியாயர்தான் அனுபவித்து, தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய தத்வம் சுருக்கமாய்ச் சூசிப்பிவிக்கப்பட்டது. அதைவிரித்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த தத்வத்தை உபாத்தியாயர் பூர்த்தியாய்த் தெரிந்துகொள்ள மாட்டாமல் போனாலும், தனது இருதயத்தின் பக்கம் பூர்த்தியாகத் திரும்பவேண்டும். தனது சிஷ்யர்கள் அந்த தத்துவத்தை அங்கீகரித்து அவலம்பிக்கும் வண்ணம் செய்வதுவே தனது பிரபல பிரயத்தனமாயிருக்கவேண்டும்.

எல்லா மதங்களும் ஒரே முடிவானஸ்தானத்திற்கு பின்ன மார்க்கங்களென இந்த தத்துவங்களால் எவ்விதம் தெரியுமோ பார்ப்போம். பிரதி மதமேயல்லாமல், பிரதி ஜனாங்கமும், பிரதி ஜாதியும், பிரதி சங்கமும்கூட அவ்வித மார்க்கமே. பிரதி வியக்தியும் அவனை ஜனாங்கத்திற்கு சேர்ந்தவனானாலும் சரியே, இந்த ஸாமான்ய முடிவானஸ்தானத்தை அடைவதற்கே, தனது மார்க்கத்தில்தான் போய்க்கொண்டிருக்கிறான். ஆனதுபற்றியே, ஸர்வமதங்களும், ஸர்வஜனாங்கங்களும், சஹோதரத்வத்தில் கலக்கச்செய்வதற்கு பிர்ம்மஞானஸமாஜம் மேற்கொள்ளல், இந்த தத்துவங்களை கிரஹிக்கின் அதினின்று நேற்று உபன்னியாஸத்தில் சொல்லப்பட்ட உலகப்பொது மதம் ஸத்தியமெனப் பிரத்யக்ஷமாய் அறியக் கடவோம். மேலும், நம்மில் ஒவ்வொருவனும், தனது மதத்தைக் கைவிடாமலே, உலகப்பொதுமதத்தில் சேர அவகாசமிருக்கென்பதாகத் தெரிந்து கொள்ளின், ஒவ்



வொருவனும் தன் ஜனாங்கத்தின் தர்மங்களைக் கைவிடாமலே, சரியான அபிவிருத்தியுண்டாகியிருக்குமாகில், ஜகத்புருஷன் ஆகலாமெனக்கூட தெரியக்கடவோம். எல்லாமதங்களுக்கும் உலகப்பொது மதம் முன்னேற்ற முள்ளதாயிருக்கின்றது. அவ்விதமே ஸகல ஜனாங்கங்களுக்கும் ஜகத் புருஷத்வம் முன்னேற்ற முள்ளதாயிருக்கின்றது. இவ்வித உன்னத லக்ஷியங்களை போதித்த மாத்திரத்தில் எங்கள் வித்தியார்த்திகளுக்கு தங்கள் ஜனாங்கத்தில் அபிமானம் குன்றாது. தங்கள் மதத்தில் சிரத்தையும் குறைவுபடாது. ஆனதால், எங்கள் பிரபஞ்ச விசுவவித்யாலயத்தினின்று, ஏனைய வித்யார்த்திகளைவிட தமது தேசத்தில் விசேஷ அபிமானமுள்ள வித்யார்த்திகளும், புருஷர்களும் வெளிப்படுவார்கள். ஏனைய வித்யார்த்திகளைவிட தங்கள் சொந்த மதத்தினின்று விசேஷ உண்மைகளைக் கிரஹித்தலுக்கு அதிக ஆதுரமுள்ள வித்யார்த்திகள் வெளிப்படுவார்கள். ஏனெனில், கொஞ்சமட்டும், உலகப்பொது மதத்தில் உன்னத ஜீவிதத்தை அவர்கள் தெரிந்துகொண்டு, அதற்கனுகுணமாக ஜீவிக்கப் பிரயத்தனிப்பார்கள் ஆனதால் கிரமமாய் உள் ஜாதீய பாவத்தைக் கடந்து, அதன் மேல்படியான ஜாதி அதீத பாவத்தையடைவோம். எங்கள் உபாத்தியாயர் அபிவிருத்தி முக்தியாத்மகமென தெரிந்தவர் ஆவதும், மனிதனிடம் ஈசுவரனான ஜீவாத்மாவிற்கு சேவகன் ஆவதும் அவனது தர்மமாகும். அந்தராத்மாவிற்கு சேவகனாவதற்கும், அந்த ஆத்மா சரீரங்களை ஸ்வாதீனம் செய்துகொள்வதற்காகவும் ஈடுபடுவான். அது உபாத்தியாயரது கர்த்தவ்யம். ஆனதால், அவர் தனது சிஷ்யர்களிடத்துள்ள ஈசுவரனைக்கண்டு கொள்வதும், அபிவிருத்தி இந்தச் சரீரங்களின் துவாரா ஆகவேண்டியிருக்கின்றமையால் இச்சரீரங்களுக்கு அந்த ஈசுவரன் தன்ஸ்வபாவத்தைக் கொஞ்சம் உண்டாக்குவதற்காகத்தான் அந்த ஈசுவரனுக்கு ஈடுபடலும் அவரது தர்மங்கள்.

பரிவர்த்தனை திருஷ்டியால் அபிவிருத்தி விஷயமாய் ஆலோசிக்கக்கூடும். இவ்வுலகில் அக்ஞானம், சந்தேகம்,

பயம், துக்கம், உபேக்ஷையிருத்தலைப் பார்க்கிறோமன்றோ! இம்மார்க்கங்களில் சக்திகள் பிரவஹித்துக் கொண்டிருக்கும் பொழுது அவைகளை நல்லமார்க்கங்களில் திருப்புதலே அபிவிருத்திக்கு மார்க்கம். ஆனதால் எவனிடமேனும் அக்ஞானம், சந்தேகம் காணப்படும்பொழுது உபாத்தியாயர் அவைகளின் ஸ்தானத்தில் ஞானமுண்டாகும்படி உதவிசெய்வார். அவ்விதமே பயமிருக்குமிடத்தில் தைரியத்தையும், துக்கமுள்ள விடத்தில் சாந்தி, ஸந்தோஷம், ஆசையுண்டாகும்படிக்கும் உபேக்ஷையுள்ள விடத்தில் உத்ஸாஹமுண்டாகும்படிக்கும் உதவி புரிவார்.

பிரபஞ்ச விசுவ வித்யாலயத்தின் மற்றொரு தத்துவத்தைக் குறித்து முக்கியமாய்ச் சொல்லி முடிப்பேன். அது என்னவெனின், ஒவ்வொரு கேந்திரஸ்தானத்திலும், பிரதி வித்யார்த்தியும், தானொரு நாயகனாகும்வண்ணம் கல்வியை அடைதல் வேண்டும். தற்காலம் உலகில் நாயகத்வம் அதியவசியமாக வேண்டியிருக்கிறது. நீங்கள் எந்த தேசத்தைப் போய் பார்க்கினும் அங்கிருக்கப்பட்டவர்கள் "நாங்கள் அனுசரிக்கத்தகுந்த நாயகர் எவர்" எனக் கேட்பார்கள். அவர்களுக்கு நான் "உங்களுக்கு நீங்களே ஏன் நாயகர்களாக இருக்கப்படாது" என பதிலுத்தரம் கொடுத்துக்கொண்டிருப்பேன். நிஜமாய் உலகம் தன்னைத்தான் நடப்பித்துக் கொள்ளுமாயின் மிகவும் நன்றாயிருக்கும். ஒரு பெரிய ஜகத்குரு, நாயகர்களுக்கெல்லாம் நாயகர், வர இருக்கிறார். கொஞ்சமட்டில் நாயகர்களெல்லாம் அவரைச் சுற்றிலும் சேர்ந்து, அவர் ஸமாசாரத்தை பிரசாரம் செய்யவேண்டியிருக்கிறது. அவர் கொண்டுவந்தளிக்கும் சமாசாரத்தை பக்தி சிரத்தையோடும், உத்ஸாஹத்தோடும், தியாகபுத்தியோடும், ஆத்மஸம்யமத்தோடும், ஏற்று உலகிலளிப்பதற்குத் தகுந்தவர்களை சித்தம்செய்து அவர் வரும் ஸமயத்தில் அவருக்குக் காணிக்கையாகக் கொடுக்க உண்டாவதைவிட, இப்பிரபஞ்ச விசுவ வித்யாலயத்தில் விசேஷ பாக்கியம் உண்டாகப் போவதில்லை, விசேஷ அபிலாஷையும் இருக்கமாட்டா. நீங்களெல்லோரும்



இந்த விசுவவித்யாலயத்தைக் குறித்து ஸ்வப்பனங்களைக் காணுதற்கு ஆரம்பித்திருக்கின்றீர்களென எண்ணுகிறேன். இந்த லக்ஷியங்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அவைகளைக் குறித்து விசாரித்துப் போதப்படுத்திக்கொண்டு அவைகளையனுசரித்து, அவைகள் பக்கம் அவலம்பித்து சமுசயமின்றி நிற்றலுக்குத் தக்கவர்களாயிருக்கிறோமென நினைக்க ஆரம்பித்திருக்கிறீர்களென எண்ணுவேன். இப்பிரபஞ்ச விசுவ வித்யாலயம், அதை ஸ்தாபிக்கவேண்டுமென முதல் முதல் தலையிட்டுக்கொண்டவரின் பெருமைக்குத் தக்கவாறிருந்து, ஜகத்குருவின் காரியம் இவ்வுலகில் நடந்தேறும் வண்ணம், நீங்களெல்லோரும் ஆலோசித்துத் தக்க உபாயங்களைக் கண்டுபிடித்து, நிர்மாணத்திற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்வீர்களென வேண்டுகிறேன்.

ஓம் ஶாந்தி:। ஶாந்தி:। ஶாந்தி:॥

# II. *நாம் அவசியம் செய்யத் தகுந்தவேலை.

நாம் அவசியம் செய்யத்தகுந்தவேலை யாதெனின், சீக்கிரத்தில் ஸ்ரீ ஜகத்குரு வரப்போகிறாரானபடியால், அதற்கு ஜகத்தை சித்தப்படுத்தி, அவரது தேஜஸை நமது துவாராஜகத்தில் பிரவேசிக்கச் செய்வதற்கு, நமக்கெவ்வளவு விக்கினங்களிருக்கினும் அவைகளைக்கடந்து நமது வேலையை ஸாதிக்கவேண்டுமென்பதே. நாம் எவ்வளவு சீக்கிரத்தில் ஸ்தூலப் பிரபஞ்சத்தை சித்தப்படுத்துவோமோ, ஜகத்குரு அவ்வளவு விரைவில் வந்து நமக்கு நன்மைபுரிவார். சூக்ஷ்மப் பிரபஞ்சத்தில் கூட நம் துவாரா அவரது தேஜஸ் ஸ்தூலப் பிரபஞ்சத்திற்கு பிரவஹிப்பதற்கு நமக்கு அவர்வருகையைக் குறித்து திடநம்பிக்கை இருப்பதுமன்றி, ஸ்தூலலோகத்தில்

* தெலுங்கு திவ்ய ஞானதீபிகையினின்று பத்திராதிபரால் மொழி பெயர்க்கப்பட்டது.

அவர் அவதாரத்திற்குத் தடையேற்படாமல், உலகோரை சித்தஞ்செய்யும் பாரம் நம்மீதிருக்கின்றது.

நமது இந்ததேசத்தில் இப்பொழுது மூன்றுவிதவேலைகள் முக்கியமாய்ச் செய்யவேண்டியது மிகவும் அவஸரமாகும். முதலாவது—ஸ்திரீகளின் ஸ்திதியைச் செம்மைப்படுத்தல். பூர்வகாலத்தில் இந்து ஸ்திரீகள் வெகு வித்யாவந்தர்கள். புருஷர்களுடன் கூட எல்லா வியவஹாரங்களிலும் வேலைசெய்வார்கள். ராஜநீதிவிஷயத்தில்கூட பிராசீன இந்து ஸ்திரீகளுக்கு ஸம்பந்தம் உண்டாயிருந்ததாகவும், ராஜாவாகட்டும் அவருக்குக் கீழ் அதிபதியாகட்டும் அவரது தர்மத்தை நன்றாய்ச் செய்யாதபொழுது ஸ்திரீகள் மந்திரிகளிடம் விண்ணப்பம் செய்து வந்ததாகவும், சில திருஷ்டாந்தங்களுள. ஆயிரவருஷங்களாக மாத்திரமே ஸ்திரீகள் அவ்வித வியவஹாரங்களில் ஸம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் இருந்ததாகப் புலப்படும். மஹம்மதியர்கள் நமது தேசத்திற்கு பிரபுக்களாகவரவே, இந்து வித்தையின் லக்ஷணத்தை முதலில் அவர்கள் கெடுத்தார்கள். அவர்கள் டில்லியில் வாசஞ்செய்தது முதல் எல்லா விதங்களிலும் வித்யாலக்ஷணத்தைக் குறைவுபடுத்த ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு கோஷா அல்லது படுதா ஆசாரம் உண்டு. அதாவது பெண்டுகள் வீட்டிற்கு வெளியில்வராமல், புருஷர்களுக்குத் தென்படாமல், வீட்டிலேயே முக்காடு போட்டுக்கொண்டு இருந்துவந்தார்கள். இந்து ஸ்திரீகள் கூட முதலில், தங்கள் மரியாதையைக்காப்பாற்றிக்கொள்வதற்கும், பின்னர் லௌகிககாரணத்தாலும், கோஷாபழக்கத்தைச் சிலர் ஆரம்பித்தார்கள். மரியாதையுள்ள மஹம்மதிய ஸ்திரீகளைப்போல் கோஷாவாக இராவிடில் ஹீனஜாதி ஸ்திரீகளென உலகோர் எண்ணுவார்களோ என்னமோவென்ற பீதியுடன் இந்து ஸ்திரீகள் கூட கோஷாவாக இருக்க ஆரம்பித்தனர். வர வர, கோஷாவாக இராமல்போனால் தங்களுக்கு உலகத்தில் மரியாதை உண்டாகாதென்ற தாபிப்பிராயத்தோடு இந்து ஸ்திரீகள் அந்த ஆசாரத்தையே கைவிடாமலிருந்தார்கள். தக்ஷிண இந்துஸ்தானத்தில் அவ்வித



அவசியம் இல்லாவிடினும், அங்கும் ஸதாபெரிய குடும்பங்களில் பிறந்து வளர்ந்த பிராம்மண க்ஷத்திரிய ஸ்திரீகள் கூட வியவஹாரங்களில் ஸம்பந்தத்தை விட்டொழித்தார்கள். லௌகிக மரியாதையைக் காப்பாற்றுவதற்காக வைசிய ஸ்திரீகள் கூட அவ்விதமே ஆசரித்தார்கள். இங்கிலீஷ் நம்தேசங்களில் பிரபலப்பட்ட பின்னரும், இந்துக்களில் புருஷர்கள் மாத்திரமே வித்யாப்பியாசம் செய்தார்கள். ஸ்திரீகள் பின்வாங்கினார்கள். ஆகையால் அவர்கள் ஈனஸ்திதியிலிருந்தார்கள். லௌகிகமாய் மாறுதல்களை இச்சிப்பவர்கள் பிரபஞ்ச வியவஹாரங்களை உத்தேசித்து மாத்திரமே ஸ்திரீகளுக்குக் கல்விகற்பித்தல் அவசியமென வாதிக்கிறார்களே ஒழிய, இந்து சாஸ்திரங்களை ஆதாரமாகக் கைக்கொண்டு வாதியார்கள். பிர்ம்மஞான ஸபையார் அவ்வித சாஸ்திரங்கள் கூட தங்கள் வாதத்திற்குப் பலமுள்ளவைகளெனச் சொன்னால் அதற்குச் சாந்தஸமெனச் சொல்வார்கள். புருஷர்களுடன் கூட பெண்டுகள் எல்லா உலக வியவகாரங்களிலும் ஈடுபடுதல் இப்பொழுது அவசியம். ஆகையால் இதைக்குறித்துப் பாடுபடுபவர்கள் விசேஷ சிரத்தையை வஹிக்கவேண்டும். ஸ்திரீகள் புருஷர்களைவிடத் தாழ்மையாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தை விட்டொழியுங்கள். புருஷர்களிடத்துச் சில குணங்கள், ஸ்திரீகளிடத்துச் சில குணங்கள், விருத்தியாகவேண்டுமென சிருஷ்டியின் ஏற்பாட்டில் காணலாம். நிச்சய ஆத்மபுத்தியும், பலமும், தைரியமும் புருஷன் விருத்திசெய்துகொண்டு, வளர்த்தல், காப்பாற்றுதல், வேலைசெய்தல், மிருதுத்வம், விநயம், நிதானம், கஷ்டத்தைச் சகித்தல் என்ற குணங்கள் ஸ்திரீகள் விருத்திசெய்துகொண்டு, பின்னர் அந்த இரண்டுவகையான குணங்களைக் கலக்கவேண்டும். ஸ்திரீயின் தயை, புருஷனின் பலம், தைரியம் கலக்குமாகில் மானிடஜாதிக்கு ஸம்பூரணமாயுள்ள விருத்தியுண்டாகும்.

குடும்பமெனின், புருஷன், அவனது பாரியை, அவர்களது பிள்ளைகளும் கலந்து ஒரு மானிட வியக்தியாகயோசிக்கவேண்டுமென மனுகூறியிருக்கின்றார். பூரணமான மானிட

ஸிருஷ்டியில் இனி புருஷ ஸ்திரீ வியக்திகள் இரண்டும் கலந்திருக்குமென்பதாக பிளவாட்ஸ்கி அம்மையார் சொன்னார்கள். அவ்வித மானிட பரிபூரணத்வத்தையே அர்த்த நாரீசுவரர் குறிப்பிக்கிறார்.

இங்கிலாந்தில் கூட அங்குள்ள ஸ்திரீகள் அவர்களது ஸ்வாதந்திரத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்காக மிகவும் கஷ்டப்பட்டார்கள். அது கிடைத்தபின்னர் மானிட சங்கத்தைச் செம்மைப்படுத்த எத்தனித்தார்கள். முதலில் சிறு குழந்தைகளின் நன்மையையும் ஆரோக்கியத்தையும் விருத்தி செய்தார்கள். இப்பொழுதும் பம்பாயில் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் 666 பெயர்கள் இறந்து போகிறார்கள். இவ்வித துர்கதை இங்கிலாந்தில் கூட 40 அல்லது 50 வருடங்களுக்கு முன்வரை இருந்தது. இப்பொழுது அது மிகவும் செம்மைப் படுத்தப்பட்டது. ஆகையால் ஸ்திரீகளின் அபிவிருத்திவேலை சிறுவர்களின் நன்மையைக்கூடச் சார்ந்ததாகும். ஆனதால் சக்தியும் வாக்குசாமர்த்தியமுள்ள ஸ்திரீ புருஷர்களெல்லோரும் ஸ்திரீகள் குழந்தைகள் நலம்பெறும் வழிக்கு அனுகூலம் செய்யத்தகும்.

இரண்டாவது— மதங்களின் ஏகத்வம். ஒரு வருஷத்திற்கு முன்னர் டில்லியில் நடந்த சபையில் நமது தேசத்திலுள்ள இந்துக்கள் மஹம்மதியர்கள் அண்ணன் தம்பிகளைப்போல் கலந்துறவாடியிருப்பதற்கு உபயமதஸ்தர்களிலும் பிரமுகர்கள் சேர்ந்து சபை கூடினும் அவர்கள் உத்தேசம் நிறைவேறவில்லையென்ற விஷயம் நமக்குத் தெரிந்ததேயன்றோ! அதற்குக் காரணமென்னவெனின், மதமென்ற வியாஜத்தின் பேரில் உபயத்தாரும் தங்களுக்கு ராஜீய அதிகாரங்கள் வேண்டுமெனப் போராடினார்கள்.

நமது இந்துதேசத்தில் அல்ப சங்கியையாயுள்ள பார்சிகளும், கிறிஸ்தவர்களும், நல்ல உதார புத்தியோடு தங்களுக்குப் பிரத்யேகமாய் உரிமைகள் வேண்டுமெனக் கோராதவர்களானார்கள். விசேஷ சங்கியையுள்ளவர்கள் மாத்திரம் அவ்



வித உரிமைகளைக் கோரினார்கள். அவ்விஷயமாய் ஸபையார் தீர்மானிக்காமல்போனது வெகுவாக இந்துதேசத்திற்கு நன்மைக்காகவே இருத்தல்வேண்டும்.

இவ்வித ஸ்திதியில் பிரம்மஞான சபையார் செய்ய வேண்டியவேலை யென்னவெனின்-உபயமதஸ்தர்களிலுமுள்ள சிறுவர் சிறுமிகளை எச்சரிக்கை செய்யத்தகும். பெரியவர்கள் ஸ்வார்த்தபரான், ஆனபடியால் பால்யர்கள் அவர்களது ஜன்மபூமியான பாரதமாதாவின் அபிவிருத்திகளை கவனிக்க உத்ஸாஹப்படுவார்கள். முஸல்மான்கள் இந்து மதத்தைக்குறித்து விரோதமாகப் பிரவர்த்தித்துக் கொண்டிருப்பது மாத்திரமேயல்லாமல், வெகுபெயர்கள் இந்துக்களைத் துவேஷிக்கிறார்கள். மேலும் அவர்களுடைய ஆதிகுருவான பைகம்பர் ஹஜரத் மஹம்மது அவர்கள் யுத்தத்தில் எதிர்த்தவர்களை குரூரமாகப் பார்க்கினும், யுத்தத்தில் பிடிக்கப்பட்ட கைதிகளை வெகு தயையோடு பார்த்து அவர்களுக்கு சகாயம் செய்தற்கு நன்றாய் விருப்புற்றார். மஹம்மதிய சூரர்கள் தாங்கள் பிரியமாய்ப் புசிக்கும் ரொட்டிகளை இந்துக் கைதிகளுக்குக் கொடுத்து ருசியில்லாத உணவைத் தாங்கள் உண்பவர்கள். கிறிஸ்தவர்களின் வேதமான பைபிளில் பழைய நிபந்தனைகளில் உள்ளது போலவே, முஸல்மான் வேதமான குரானில் கூட அதிசயோக்திகள் இருக்கின்றன. கிறிஸ்து தேவர், பூததயையைக் குறித்து மலைமீதளித்த உபதேசம் இப்போதைய கிறிஸ்தவர்கள் ஆசரணைக்குக் கொண்டுவருவார்களா? ஒருவன் சட்டையைத் திருடினவனுக்கு அங்கவஸ்திரம் கூட கொடுக்க வேண்டுமென கிறிஸ்து தேவர்செய்த உபதேசத்தை யனுசரிக்கின், மோசஞ்செய்தவனுக்கு இரண்டுதுணிகள் கிடைக்கும்; நியாயமாகச் சஞ்சரிப்பவன் நிர்வாணமாயிருக்க வேண்டிவரும். ஆனதால் வியவஹாரதசையில் வேலைக்குதவாத விஷயங்கள், அதிசயோக்திகள், தெய்வாவேசத்தால் சொல்லப்பட்டதாகக் கிறிஸ்தவர்கள் நம்பும் பைபிளில் இருப்பதுபோலவே, மஹம்மதியர்களுக்கு தெய்வவாக்காயுள்ள குரானில்கூட அவ்வித அதிசயோக்தி வர்ணனைகளிருக்

கின்றன. இந்து சாஸ்திரங்களில் மானிடர்களின் நாகரீக அவஸ்தையை ஆதாரமாகக்கொண்டு வருணாசிரமதர்மங்கள் ஏற்பட்டன. க்ஷத்திரியர்கள் இந்து தேசத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றும், யுத்தஞ்செய்யவேண்டுமென்றும், பிராம்மணர்கள் அவ்விதம் செய்யாமல் சுத்தர்களாயும், கெட்டபுத்தியற்றவர்களாயும் இருந்து உலகஸேவை செய்யவேண்டுமென்றும், இந்து தர்ம சாஸ்திரங்கள் உத்கோஷிக்கின்றன. இந்து முஸல்மான் கூட்டம் கூடும்பொழுது இங்கிலாந்து ராஜ்யத்தினின்று இந்தியா ராஜ்யத்தைப் பிரித்து வேறுபடுத்தும் உபாயங்களில் தலையிடப்படாது.

இந்து தேசத்தின் ஸ்வதந்தரத்தை சிறிதுகாலம் தாமதப்படுத்திவைக்கலாமே ஒழிய, இங்கிலாந்தினின்று இந்தியாவைப் பிரித்துவிட வேண்டாமென இந்தியா தேசத்தின் க்ஷேமத்தைக் காப்பாற்றும் அதிகாரியாயுள்ள அகஸ்திய மஹரிஷியின் அபிப்பிராயம். டாக்டர் அனிபெஸண்டம்மையவர்கள் அந்த ஏற்பாட்டையனுசரித்தே நடக்கிறார்கள். இந்துக்களுக்கும் முஸல்மான்களுக்கும் ஐக்கியம் முக்கியமாய் உண்டாகச்செய்யவேண்டின், நிஜமான ஏற்பாடுகளின்பேரில் அவர்களுக்குப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்க வேண்டும். அதாவது, மதத்தைக்கற்றுக்கொடாமல் லௌகீக வித்தையை மாத்திரம் பாடசாலைகளில் சொல்லிக்கொடுப்பதை ஒழித்து, அவரவர் ஜன்மமதங்களைக்கூட அவர்களின் குழந்தைகளுக்குப் பாடசாலையில் சொல்லிக்கொடுக்கின் உபயத்தாருக்கும் சிநேகம், பிரேமை விருத்தியாகும். பிர்ம்மஞான சபையார் ஏற்படுத்தியுள்ள பாடசாலைகளில் அவ்விதம் சொல்லிக்கொடுப்பதற்கு யத்தனங்கள் நடந்துவருகின்றனவே ஒழிய அவைகளுக்கு இன்னும் போதுமான அளவு வியாப்தியில்லை. இருவகைத்தாரின் பிள்ளைகளுக்கு அவர்கள் மதங்களைக்கூட பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் போதிக்கின் இதராளுடைய மதங்களில் அவர்களுக்குச்சமமான கௌரவம் உண்டாகும். இதரர்கள்கூட தனசகாயம் அவர்களின் சக்தியானுஸாரம் பிரதிமாதம் கொடுக்கின் அவ்வேலை நிறைவேறும்.



கிறிஸ்டியன் மெதடிஸ்டு ஸபையார் பிரதிவாரம் ஒவ்வொருவரும் ஒன்றரையணா வீதம் கொடுக்கவே அந்த ஸமாஜத்தாருக்கு அதிக திரவியம் சேர்ந்து வேலை நிறைவேறி அவர்கள் பெரிய தனவான்களானார்கள். இவ்விதமே நியமபாலனஞ் செய்யின் இவ்வேலைகூட ஜயப்பிரதமாய் முடிவுறும்.

மூன்றாவது தீண்டாமை—தீண்டாமை தோஷத்தை விட்டொழித்தல்—தீண்டாமையென்னும் விஷயம் உலகத்திலுள்ள விஷயமே. நாம் ஒருவரையொருவர் தொடின் சில மாறுதல்கள் ஏற்படும். ஒரு நீர்ச்சுனையினின்று ஜலத்துளிகள் வெளியில் வெளிப்படுவதுபோல், நமது ஸ்தூல சரீரத்தினின்று அதன் ஸ்தூல அணுக்கள் சுற்றுப்பக்கங்களுக்கு வியாபிக்கும். அவ்விதமே பிரேதப் பிதுர்லோகங்களில்கூட சரீரங்களிலுள்ள சூக்ஷ்ம அணுக்கள்கூட வியாபிக்கும். கோபம் உண்டான மனிதனின் வியர்வை ஸ்பஷ்டமாக மாறுமென்பதாக பிரகிருதி சாஸ்திரம்கூடச் சொல்லுகின்றது. ஆனதால் நமக்குக் கோபம் வந்தபொழுது, அதாவது நமது காமமய கோசம் உபத்திரவமாக அசங்கும் பொழுது, அக்கம் பக்கங்களிலுள்ளவர்களுடைய அன்னமய, பிராணமய, (அசுத்த) மனோமய கோசங்களுக்குக்கூட கலக்கமுண்டுபண்ணுகிறோம். அக்கம்பக்கமுள்ளவர்களின் ஸ்தூல (அன்னமய பிராணமய கோசங்கள்) சரீரங்கள்கூட அசையுமென பிரகிருதி சாஸ்திரிகள்கூட ஒப்புக்கொள்கிறார்கள். மாம்ஸபக்ஷணம் செய்பவனுடையவும், அழுக்குள்ள வீடுகளில் உள்ளவர்களுடையவும் தேஜஸ்கள் அவர்களுடைய அக்கம்பக்கத்தார்களுக்குக்கூட வியாபித்து அவர்களது தேஜஸ்களையும் நாசம்செய்யும். அக்காரணம் பற்றியே சவங்களை, அதாவது பிராணன் பிரிந்த ஜந்துக்களை பக்ஷணம் செய்பவரோடும், சாராயம் முதலாயுள்ள லாகிரி வஸ்துக்களைக் குடிப்பவர்களோடும், ஸாங்கத்தியம் செய்யப்படாது. தொடக்கூடாதவர்களென அழைக்கப்படும் ஹீன ஜாதிகள் தங்கள் அழுக்கு வீடுகளையும், எளியதனத்தையும் கொஞ்சநேரமாவது மறந்து போவதற்காக, கள் சாராயம் முதலியவைகளைக் குடிப்பார்கள். மாம்ஸ பக்ஷ

ணத்தைவிட மத்தியபானஞ்செய்தல் அவர்களின் அக்கம்பக்கத்தார்களை விசேஷ நாசஞ்செய்யும். அப்படிப்பட்டவர்களுடைய மலின அணுக்கள் அவர்களை நாசஞ்செய்யாமல் விடாது. ஆனதால், அவர்களைத் தொடாமலிருத்தலென்னும் தீண்டாமை பிரகிருதி தர்மமேயாகும். ஆனதுபற்றி, மிருந்தவர்கள் முதலாயுள்ளவர்கள் ஹீனஜாதியாரைத் தொடக்கூடாதென்று சொல்லும் அவர்கள்வார்த்தை தப்பன்று, ஆயினும் நாம் திரிகரணசுத்தியோடு சுசியாகவிருக்கின் அவர்களின் சரீர நீச அணுக்கள் நமது தேஜஸிற்குத்தாக்கினும், அவைகள் ஜீவிக்காமல் நசித்துப்போம். நமதுமனம் வாக்குக்காய சௌசத்தில் அவ்வளவு பிரபாவம் இருக்கிறது. இவ்வித சுசியுள்ளவர்கள் சாமான்யமாய் தீண்டக்கூடாத ஜாதியாரென அழைக்கப்படுபவர்களைத் தொட்டாலும், அவர்களுக்கு எவ்வித தோஷமும் தாக்காமல் போவதுமன்றி, தங்களது ஸ்வச்சமான தேஜஸ்களில் அந்ததோஷம் விருத்தியடைய நேராது. வெகுவாய் எல்லோருக்கும் அப்படிப்பட்டவர்களைத் தீண்டுதல் சரிப்படாமல் போனாலும், பிரதிமனிதன் தயைமரியாதைகளோடு நீச ஜாதியாரோடு சம்பாஷிக்கலாமன்றோ! அப்படிப்பட்டவர்களோடு சம்பாஷிக்கும்பொழுது நமது பேச்சு, தொனி, தோஷணை, அதிக ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களோடு மரியாதையாகப் பேசவேண்டும். நமது கோபத்தை அடக்கிக்கொள்ள முடியாமல் போயின், கோபத்தோடாகட்டும், முரட்டுத்தனமாயாவதாகட்டும், நமது ஸமானர்களுடன் பேசினும் பேசலாமே ஒழிய, நமக்கு மாறுசொல்லாதவும், நாம் அடிக்கினும் திரும்ப அடியாது கைகள் கட்டிக்கொண்டவர்களுடன் மரியாதைக் குறைவாயும் முரட்டுத்தனமாகவும் வியவகரித்தல் நமது கேவல பயித்தியத்தைச் சூசிப்பிக்கும். ஸ்ரீ ராமச்சந்திரர் காட்டிலிருந்த நீசஜாதி ஸ்திரீயான சபரியைத் தெரிசித்தலும், அவளுக்கொரு பல விருக்ஷமேயிருப்பதும், நமக்குத் தெரிந்த விஷயமன்றோ! அவருக்கு இனிப்பான பழங்கள் மாத்திரம் கொடுக்கவேண்டுமென்பதாகவும், கசப்பான பழங்கள் கொடுக்கக்கூடாதெனும் தொந்திரவால் அந்த சபரி ஒவ்வொரு பழத்தையும் முன்னர் தான் கடித்துக் கசப்பாயிருக்கிறதோ இல்லை இனிப்பாயிருக்கிறதோவெனப் பரிக்ஷை செய்து பகவானுக்கு இனிப்பான பழங்களை மாத்திரம் அர்ப்பணம் செய்தாள். பகவான் பக்தையின் பக்தியை மாத்திரம் கவனித்து, பழங்களைக் கடித்துக்கொடுக்கினும், அந்த உச்சிஷ்ட தோஷத்தை விசாரியாமல் அவைகள் எல்லாவற்றையும் புசித்தார். அந்த தோஷம் அவரை எம்மாத்திரமேனு மணுகவில்லை. ஆனதால், அடையாற்றிலுள்ளவர்களாவது தீண்டாதவர்களின் விஷயமாய் மரியாதையைக் காண்பிக்கின் அவர்களுக்கு ஆத்மகௌரவம், புரோவிருத்தியுண்டாகும். இவ்விதம் லோகோபகார தீக்ஷாபராயணியும், பிர்மஞான ஸபை அத்யக்ஷணியுமான டாக்டர் அன்னிபெஸண்டம்மையாரவர்கள் இங்கிலீஷில் போதித்தார்கள்.

V. V. சிவஅவதானி.



## *மஹரிஷி ஒருவர் பிரமஞான சபையோருக்கு அனுப்பியசெய்தி.

சோதரர்களே!

சென்ற சிலவாரங்களாய் உங்களது உயர்வுபொருந்திய சபாநாயகியான அம்மையாரின் வாக்கினின்றும் நீங்கள் கேட்டு வந்திருக்கும் விஷயங்களைக் காட்டினும் இன்னுமதிகமாய் நாங்கள் இப்பொழுது உங்கட்குச் சொல்லப் புகுதல் மிகையாகுமோ! ஆகாதென்றே கருதி, பின்வருவன வற்றையும் நுங்கட்கு இப்பொழுது கூற எழுந்தேம். ஏனெனில், அரை நூற்றாண்டு காலத்தை முடித்து இதுவரை நிறைவேற்றியிருக்கிற அற்புதமான காரியங்களைக் காட்டினும் இன்னு

* இஃது அடையாற்றில் நடைபெற்ற பிரமஞான சபையின் ஜூபிலி மகோத்ஸவ காலத்தில் படிக்கப்பட்டது. சகோதரர் P. R, ஸுந்தரராஜய்யர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது.

மதிகமாய் வருநாட்களில் மிக பெருமையும் கீர்த்தியும் படைத்த உபகாரங்களை உலகிற்கு இந்த பிரமஞான சபையானது செய்யவிருக்கிறதென்பதை நீங்கள் அறிந்துணரவேண்டும்.

இந்த சபை ஸ்தாபனமாகிக் கழிந்து சென்ற அரை நூற்றாண்டு காலத்தில் அது செய்துமுடித்திருக்கும் காரியங்களைச் சற்றாராய்வோம். ஆன்மவாடியின் உண்மைகள் யாவற்றினும் சிறிதும் நம்பிக்கையற்று நாஸ்திகத்தழும்பேறிநின்ற இவ்வுலகினில், ஆதியில் அவ்வுண்மைகள் யாவும் சத்தியங்களென உலகமறிய சாக்ஷியம் புகன்றது. இவ்வுண்மையே தனக்கு மூலாதாரமான அஸ்திவாரமாக ஸ்தாபித்துக்கொண்டு, பின்னர்தான் நிறைவேற்றவந்த பெருங்காரியமான சர்வஜீவ சகோதரபாவம் ஒன்று உண்டு எனும் உண்மைச்செய்தியை இவ்வுலகமறிய முரசறைவித்தது. இப்பேருண்மையையன்றோ, உலகின்கண் அவ்வக்காலத்திற்றோன்றிய ஒவ்வொரு பரமாசாரிய மூர்த்தியும் உத்தமபுருஷனும் உலகினர்க்குத் தெளிவுறப் பறையறைவித்துத்தானும் அனுட்டித்து வந்திருக்கின்றனர். அவ்வுண்மையைத்தான் உலகத்தார் பன்முறை சிரவணம் செய்தபின்னரும் அனுட்டிக்க வழியறியாது பொழுது கழிக்கின்றனர். இவ்வுண்மையகன்ற வாழ்வினாற்றான் உலகமெங்கும் பலகொடுமைகளும் பெருங்கேடுகளும் விளைகின்றன வென்பது திண்ணம். ஆகவே அவ்விதமே சமீபகாலத்தில் உலகத்திற்கு நேர்ந்தமாப் பெருஞ்சங்கடத்தினின்றும் முற்றிலும் அழிவடையாது ஒருவாறு இவ்வுலகம் சிறிது க்ஷேமமடைந்து வாழ்தலும், இதற்குமுன் ஒழியாப் போராட்டங்கொண்டு கலகமிட்டலைந்த பல தேயத்தவரும் தற்காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் விருத்தியடையும் ஐக்யபாவத்தோடு ஒன்று சேர்ந்து வருதலும், சமீபகாலத்திய மஹாயுத்தம் நிகழ்ந்தபின்னர் நேர்ந்த பல இடுக்கண்களால் உலகின் ராஜதந்திர நிபுணர்களும் ஜனசமூகங்களின் பொதுக்காரிய நிர்வாகர்களும் உலக காரியங்களை மேல் நடத்துவதற்கு வழியறியாது ஓர் பெரும் மூட்டமான மயக்கத்தில் சூழ்ந்துவிடவே, உலகம் பெரும்ஆபத்தில் முழுகிப்



போய்விடாது சிறிது நன்மையுடன் தப்பித்துநிற்பதும், இனி இத்தருணத்தில் இச்சபையைச் சேராதவராயினும் இம்மஹாதர்மமான சகோதரபாவத்தை அனுட்டித்துக் காட்டவல்ல உயர் சக்திவாய்ந்த ஒரே மஹாபுருஷனை ஜகத்குருவாகும் ஆசார்ய மூர்த்தி ஒருவன் வருவதை எதிர்பார்த்துக்கொண்டு இவ்வையகம் களிப்படைந்து நிற்பதும் ஆகிய இவையெல்லாம் உலகங்காக்கும் பெரியோர்களின் தூதர்களாய் இக்காலத்தில் வெளிவந்து உழைத்த பின்வரும் நால்வரான உத்தமர்களின் வீரதீரச்செயல்களாலன்றோ நமக்குக் கிட்டியிருக்கின்றன. அவர்கள் தாம் ஹெலினபெட் ரோவ்னா ப்ளாவட்ஸ்கீ அம்மை, ஹென்றிஸ்டீல் ஆல்காட், அன்னை வசந்தை அம்மை, சார்லஸ் லெட்பீட்டர் ஆகிய இவர்களாவர்—இவர்கள் செய்தவேலையின் பலனன்றோ இப் புவியினிலுள்ள ஒவ்வோர் மதம் ஜாதி பல்வகைக்கொள்கைகள் ஆகிய இவற்றைச்சார்ந்த ஆண் பெண் இருபாலார் யாவரும் சகோதரபாவமெனும் ஒற்றுமையை உண்மையான சிரத்தையோடு தாந்தாம் அனுஷ்டித்தும் பிறரும் அனுஷ்டித்து வருமாறு ஏவியும் வருதலை நாம் காண்பது. ஆதலின் உண்மையையுரைக்குமிடத்து, இச்சோதரபாவமாகிய நற்குணத்திற்கு எதிரிடையாய் நிற்கும் தூற்குணங்களான விரோதபாவம், தமதெனும் குறுகிய நோக்கம், தாம்தாமெனும் அகங்காரத்தால் மற்றவரை பிரித்துவிடும் செருக்கு ஆகிய இவ்வனந்தம் அல்லற்படைகள் மேலோங்கி எதிர்த்து வராமல் தடைசெய்துவிடும் கோட்டைச்சுவராய் நிற்றல் பெரும்பாலும் இப்பிரம்மவித்யாசபையின் வியவஹாரமே எனக் கூறவேண்டும். இவ்வித உயர் நலம் பொருந்திய இச் சபையினங்கத்தினராகிய நீவிர் உலகினருள் சொற்பத் தொகையுள்ளவரேயாயினும், ஆன்மவீர்யமும் பிரபாவமும் உங்களிடமிருத்தலால் இதர உலகத்தவர் கோடி கோடியாய் நிற்பினும் உம்மோடு எதிர்த்து அடக்கிவிடத்திறனுடையவராகார். ஏனெனில், ஆன்ம பிரபாவம் பெருந்தொகையைப் பொறுத்ததன்று. பின்னை, நெஞ்சினிலணையாது நிலைபெற்றுவிளங்கும் உண்மை விசுவாசத்தையே சார்ந்திருக்கின்றது. சத்தியத்தைக் கடைப்பிடிக்கும் உறுதி

யானது அறிவின்மை, அழுக்காறு, இவை மலைபோல் வெளிப்படினும் அவற்றைத்தகர்த்துப் பொடியாக்கிவிடும். மேலும் நீங்கள் சகோரதபாவமெனும் இவ்வுண்மையைக்கேட்டவுடன் நம்பினீர்கள். அந்நம்பிக்கைகொண்டு, இவ்வுண்மையை நீங்கள் உங்களுடைய பிரதிதினவாழ்வில் கூடியவரை அனுஷ்டித்து வந்திருக்கிறீர்கள். வெளியாசாரங்கள் தத்தமது சக்திக்கேற்றவாறு அப்போதைக்கப்போது சிலரும் பலருமாய்ச் செய்துகொண்ட ஏற்பாடுகள். இவற்றை நம்பிவாழும் வெளியுலகினரது மதிப்பில் கேவலஸ்தர்களாகவும் மதிப்பற்றசாமானியராகவும் நீங்கள் கருதப்பட்டாலும், எங்களது பூர்ணதிருஷ்டியினால் கோசரிக்கப்படும் பாரமார்த்திக உலகத்தில் நீங்கள் அறிவு, ஆனந்தம், இவற்றை வெளிக்காட்டும் கண்ணாடிபோன்ற கருவிகளாகவே விளங்கிவருகின்றீர்கள். வெளிஉலகினர் மேலேசொல்லியபடி தற் பெருமையுடைய திருஷ்டிகொண்டு தம்மைநோக்கி தாம் பெரும் அந்தஸ்துடையவரென வெகு அட்டகாசத்துடன் கூவிக்கொள்ளுகின்றனராயினும், அது மூடபாவத்தால் ஏற்படுத்திக்கொள்ளும் பொய்யுணர்வாகுமேயன்றி வேறாகாது. உண்மையில் உயர் திருஷ்டியில் நீங்களே உலகில் உண்மை கௌரவம் உடையவராவீர். மற்றையர்களே அந்தகாரத்தில் நிற்பவர்கள். அவ்வந்தகாரத்தில் உண்மை விஷயங்கள்யாவும் தெரியும்படி பிரகாசிக்கும் அறிவாகும் சோதி உமதேயாகும். உம்மாலேயே உலகத்தினிருளை நீக்கும் அருணோதயம் ஏற்படப்போகின்றது; ஆதலின் உங்களது பெரும் புண்ணியவினையின் பலனாய் இப்பொழுது உலகமெங்கும் பிரகாசிக்க ஆரம்பித்திருக்கும் நல்லறிவாம் சோதியைக்கண்ணுற்று நீங்கள் ஆனந்தமடையுமித்தருணத்தில், சென்றகாலத்தை மறந்துவிடாமல் அவ்வாரம்பகாலத்தில் நுங்கட்கு வழிகாட்டிகளாய் ஏற்பட்டு இச்சபையை நிர்மாணம்பண்ண முன்வந்த ஆதிஸ்தாபகர்களையும் அவர்களை நம்பி ஒத்துழைத்த கூட்டாளிகளையும் கௌரவப்படுத்தி நன்றிபாராட்டுங்கள். அவர்களிடம் உங்களது பணிவான மதிப்பைக்காட்டுங்கள். ஏனெனில், பெரியோர்களால் கருணையுடன் மறைத்துவைக்கப்பட்டிருக்கும் சத்தியமானது,



அவ்வச்சமயங்களில் தனது திரையை அகற்றிக்கொண்டு அறியாமை நிறைந்த பேதைமாந்தர் முன் வெளிவரும் பொழுதெல்லாம் அதனை அறியாத்தன்மையால் பாழுமுலகினர்கண் மூடிகளாய் அவரை நோக்கிச்செய்த ஏளனம் விரோதம் பகையை தீங்குமுதலிய தாங்கொணாச்சுமையனைத்தையும் தாங்கி நின்றவர்கள் அவர்களேயன்றோ! இவரிடத்தில்நாங்கள் விசேட நன்றி பாராட்டிவருவது இவர்களுக்குத் தெரியும். நீங்களும் அவ்வாறே அவர்களால் இவ்வளவு கீர்த்தியுடன் ஆரம்பிக்கப்பெற்ற இப் பெரும் புண்ணிய காரியத்தை நின்றுவிடாமல் மேல்நடத்திவருவதால் அவர்களிடம் நன்றியைக் காட்டுங்கள். இனி இதற் கனுகூலமாகவே, உங்களுக்குற்சாக மூட்டி முன்னின்று வழிகாட்டுதற்கு வெளியுலகில் எங்களது அதிகாரம்பெற்ற பிரதிநிதியும், எங்களது மனதிற் கிசைந்த அன்பிற்குரிய கூட்டாளியும், விசேஷதிறனும் வீரியமும் பெற்ற மனுஷியுமான உங்களது சபாநாயகியம்மையாரை உங்கட்குத் துணையாகக் கொடுத்துவைத் திருக்கிறோம். இன்னு மனேகவருஷகாலம் உங்களோடு கூடவே வசிப்பவளாகி இம் மஹாசபைக்கென யாங்கள் வகுத்திருக்கும் மேன்மார்க்கத்தில் நீங்கள் சம்மதித்தால் உங்களை நடத்துவிக்கும் துணையாக வாழ்ந்துவருவாள். நீங்களும் உண்மையில் அவளிடம் அன்புவைத்திருப்பவர்களே. சில நூற்றாண்டுகளுக்கு முன்னமே, மரணம் வரினும் பின்னடையாது அவ்வம்மை காட்டியவழி செல்லச் சித்தமாயிருந்திருப்பீர்கள். இந்நாளிலும் நீங்களப்படியே இவ்வம்மையின் சொற்படி நடக்கலாம். அதனால் அந்நாளிற்போல மரணம் வராது நேராது. பின்னர் மேன்மார்க்கமாகிய பெருவாழ்வு கிட்டுமேயன்றி வேறன்று. ஆதலின் அருமைச் சோதரர்களே! அவ்வம்மை காட்டியவழியே செல்லுங்கள். இவர் அனேக ஜன்மகாலங்களாய் தனக்கு சோதரராம் மானிடரின் க்ஷேமத்திற்கு உழைத்தலே கடமையாகக்கொண்டு அதற்கென உலகமறிய உயிர் நீக்கியும், உலகறியாத்தன்மையினால் பலர் அதன் பேச்சையும் கேளாது அதனிடம் அன்புசெலுத்தி உழைப்போரிடம் தனது மூளைமயங்கி சிற்சில சமயங்களில் செய்து

விடும் கொடுமைகளையும் தாங்கி அனுபவித்து வந்திருப்பவருமாகிய அவ்வம்மையினும் சிறந்த வழிகாட்டி பொருவர் உங்களுக்குக்கிட்டவே கிட்டாது. ஆகவே இவரிடம் உண்மை அபிமானமும் விசுவாசமும் கொள்ளுவீராயின் அதனாலே இவர் தம்மிடத்தில் அழகுபெறக் காட்டிவரும் உயர்நோக்கங்கள் மீதும் நீரபிமானம் பாராட்டினவராவீர்.

இனி இவ்விதமான மஹிமையும் அபிவிருத்தியுமுடைய அரைநூற்றாண்டு உங்களுக்கு பாக்கியவசத்தால் ஏற்பட்டிருக்கின்றது. ஆதலால் உங்களைப்பார்த்து நாங்கள் இத்தருணத்தில் ஒரு வார்த்தை கூறுகின்றோம். முன்னாட்களில் ஆண் பெண்ணடங்கிய எம் மனிதர் கூட்டமும் செய்திருப்பதற்கு மிகவும் மேற்பட்ட பெருங்காரியங்களை நீங்கள் செய்து முடித்தற்குத்தகுதியடைந்திருக்கின்றீர்கள். சகோதர பாவமெனும் இப் பெருநோக்கம் யாவரும் கண்டு களிக்கும்படி உலகினர் மத்தியில் பிரத்தியக்ஷமாய் விளங்குமாறு செய்துவிடத்தகுந்த வல்லமை உங்களிடம் இருக்கின்றதெனக் கூறுகின்றோம். சண்டையிடும் வகுப்பினர், ஜாதி, மதம், தேசத்தார் இவர் யாவரும் தத்தமது சச்சரவுகளை நீக்கிக் கொள்ளவும், ஒன்றற்கொன்று முரண்பாடுள்ள பல சமயங்களும் தங்கலஹங்களை ஒழித்துத் தம்முள் அன்பும் கௌரவமும் கொண்டு சோதரர்களே போல நடந்துகொள்ளும்படி நீவிர் செய்துவிடக்கூடும். ஆதலால் பிரமஞானமெனு மிப் பேரறிவை உமது பிரதிதின அனுஷ்டானங்களில் கைக்கொண்டுழைப்பவர்களாய் நீங்கள் நடந்துவருவீர்களாகில், உங்களைக் கண்கொளும்பொழுதெல்லாம் பூர்வம் உங்களிடம் ஏற்பட்டு பல்காலங்களாய் பகையையுந் துன்பத்தையும் விளைவித்துக் கொண்டுவந்த ஜாதி மத பேதம் ஆகும் வேற்றுமைகள் யாவும் சிறிதுகாலத்தில் அத் துற்குணங்கள் நீங்கினவர்களாகி பார்ப்போர்க்கு இவ் வித்தியாசங்கள் சகல மானிடவர்க்கமும் சேர்ந்த ஒரே குடும்பம் அல்லது ஜாதியார்கட்குள் பொது க்ஷேமத்திற்காக செய்துவரவேண்டிய உழைப்பில் அவரவர் செய்யத்தகுந்த காரியம் யாது என்பதைக் காட்டுவதற் கெ



ழுந்த வெவ்வேறு அறிகுறிகளேயன்றி வேறன்றென தென் படுவனவாகிவிடும். நீங்கள் விரும்பினால் உலகிலுள்ள அஞ்ஞானத்தை ஞானமாகவும், பகைத்வேஷத்தை பிரத்தியக்ஷமான அன்பாகவும், சந்தேகம் அவநம்பிக்கையை நம்பிக்கை விசுவாசமாகவும், அவ்விதமே பிறரைவிடத் தான் வேறு என்னும் அகங்காரத்தை மற்றவர்களுடன் சேர்ந்துழைக்கும் தோழனே யான் எனும் சோதரபாவமாகவும் ஆக்கிவிடத் திறல்வாய்ந்த ரசவாதிகளே யாவீர். அன்றியும் நாற்புறத்திலும் விஷம் நிறைந்த பூடுகளைநீக்கி பூமியில் அழகும் வாசனையும் பொருந்திய மலர்களை வளர்க்கும் அருமைத் தோட்டக்காரர்களாய் உங்களுக்கு விருப்பமிருக்குமாயின் நீங்களாகலாம். அப்படியே உங்களுக் காசையிருந்தால் பரிபாகத்திலுங்களைவிடத் தாழ்ந்தோராய் இருப்பவரிடம் திடமான கருணையைத் தக்கவழியில் காட்டி உங்களைவிட அவர்கள் எவ்வளவு குறைந்தவர்களோ அவ்வளவுக்கு அவர்கண்மீது அன்பு பாராட்டிவரு மியற்கை யுடைய உத்தமகுணமுடைய மூத்த சகோதரர்களாகலாம். இனி இவ்விதமே சிறு குழந்தைகளிடம் அன்பு காட்டியும், அறிவின்மையால் வழிவிலகி நடந்து தவறுதல் செய்வோர்களிடம் விசேஷமான இரக்கம்வைத்தும் நீங்கள் நடந்துவருதல் வேண்டும். அப்படியே மிருகங்களும் தம் மிருகசுபாவத்தை விட்டு மேல்படியான மானிடதசையையடையும்பொழுது அன்பையே யனுபவித்து வந்து அதற்கெதிர்மறையான பகை யல்லது கொடுமையை அனுபவியாமல் பக்குவமடைந்து செல்லும்படி அவைகளை நீங்கள் கருணையுடன் நடத்திவருதலும் வேண்டும். பிறகு புஷ்பங்கள் விருக்ஷங்களையும் போற்றிவளருங்கள். ஏனெனில் நீங்களனைவரும் ஒரே இயற்கை, ஒரேமூலம், ஒரேமுடிவையுடையவர்கள் என்பதிற் றடையுண்டோ? இம் மஹா ரஹசியத்தை நீங்கள் தேறத் தெளிந்து அனுஷ்டித்துவரல்வேண்டும்.

வெளி உலகத்தில் சகோதரபாவமாம் இப்பேருண்மைக்
ழைத்துவரும் சகல சபைகள் முதலிய காரியங்களு
ர்வேண்டிய உதவியைப் புரிந்துவரல் வேண்டும்.

அவ்விதசபைகள் முதலியனசெய்து முடிக்கும் காரியங்களாலான பலன்களைமட்டும் கருதாமல் அவைகளின் உட்கருத்துக்களான நோக்கங்களையே யதிகமாய் நீங்கள் பாவித்துப் போற்றுவிர்களாக அவ்விதம் இச்சபைகள் செய்து முடிக்கும் வேலைகளை அளவிற்குமிஞ்சி மதிப்பிட்டுப் புகழ்ந்து வருதலும் நலமன்று. ஒரு சபையல்லது கூட்டம் செய்து முடித்தகாரியம் எவ்வாறாயினும் சரி, அது உனது சொந்த நோக்கங்கள் முக்கிய கருத்துக்கட்கு ஒவ்வினதாயினும் அல்லது முரண்படுவதாயினும் சரி, இவற்றையோசியாது, அச்சபையினதுட்கருத்து அல்லது யதார்த்தமான நோக்கம் யாதென்பதை பூரண அன்புடன் நீவிர் கவனித்தல்வேண்டும். மனமாறச்செய்த முயற்சி எதுவாயினும் அதன் வெளிப்படையான பலன் விசேஷமாகவோ, அல்லது அற்பமாகவோ இருப்பினும்சரி, நீங்கள் அம்மனத்திலுள்ள உண்மையான கருத்தையே லக்ஷியம் செய்து மதித்தல்வேண்டும். ஏனெனில் அந்தரங்க சிரத்தை கடுகளவாயிருப்பினும் அச்சிறு விதைகள் காலக்கிரமத்தில் எங்கள் ஆதிநாதனது கிருபையினால் காலக்கிரமத்தில் முளைத்தெழுந்து நாற்புறமும் நறுநாற்றம் வீசும் அழகுடைப்புஷ்பங்களாய் வளர்ந்து வருமென்பதிற் றடையுண்டோ! ஆதலின் எவரும் அந்தரங்கத்திற் காட்டிவரும் சிரத்தை விசுவாசத்தை மட்டும் நீங்கள் கவனிப்பீர்களாக. அவ்விதைகள் உங்களால் காப்பாற்றப்பட்ட பின்னர், அவை முளைத்தெழுந்து பலனுக்கு வரும்படி கடவுளே செய்து கொள்வர்.

இது என்றும் மாறுபடாத நியதியாதலின் அதனிடம் நம்பிக்கைவையுங்கள். இனி ஒரு காரியம் கருத்து அபிப்பிராயமல்லது சபை முதலியவற்றுள் எதையும் உங்களுக்கு எவ்விதம் அது பிரீதியைத்தருகின்றது. திருப்தியைத்தந்து கவனிக்கும்படி செய்கிறது. அல்லது வெறுப்பையுண்டாக்கி விரசமுண்டாக்குகின்றது என்பதை மட்டும் கருதி நீங்கள் மதித்து வருதல் நியாயமன்று. பின்னை மற்றவர்களுக்கு ஆபத்துகாலங்களில் எமமட்டிலது உதவி புரிதற்குத



வும் என்னுங்கருத்தால் அதனுழைத்தை நீங்கள் அளந்து மதித்தல் வேண்டும். ஆதலின் யதார்த்தமான சிரத்தை உற்சாகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட எக்காரியத்தையும் அவையவற்றின் ஸ்வரூபம் அல்லது போக்கு உங்கள் சொந்தமதிப்பில் அழகாயிருந்தாலும் சரி, விகாரமுடையதாயினும் சரி, மனதிற்கு திருப்தியைத்தருவதோ அல்லது வெறுப்பையுண்டாக்குவதோ என்பதை உன்னாமல் நீங்கள் யாவருமறியப் போற்றிப்புகழ்ந்து கௌரவப்படுத்தல் வேண்டும். விருப்பு வெறுப்பாகிய உலகின் பாசத்திற்குக்கட்டுப்பட்ட அடிமைகளாய் நீங்களாகுதல் கூடாது. உண்மையும் அறிவையும் முழுமனதுடன் தேடுவோர்களாகி அதனால் எதுவரினும் விடாது அவற்றைப் பின்பற்றி நீங்கள் நிற்றலே தகுதி. இவ்விதமே பிறரும்ஆகும்படி நீங்கள் தூண்டுதலேவேண்டும். ஏனெனில் சர்வ வியாபியான ஒரே உண்மை அல்லது எங்கெனும் நிறைந்த சோதி என்பது உலகினில் பல்கோடியாம் மானிடரின் இயற்கை அவர்களது பரிபாகநிலைமை இவற்றிற்கியைந்து கணக்கற்ற வடிவங்களில் தன்னை மறைத்துக்கொண்டு விளங்குகின்றது. இவற்றுள் அனேகம் உங்களுக்கு வெறுப்புள்ளவைகளாகத்தோன்றுவது சகஜமே. இனி உங்கள் கருத்துக்கள் வழிகளல்லது, வியவகாரங்களை பிறருமனுஷ்டிக்கும்படி அவரைக்கட்டாயப்படுத்தல் கூடவே கூடாது. பின்னை அவரவர் மதிப்புடன் போற்றிவரும் பெரும் லக்ஷியங்களை அவரவர்களடைந்து வரும்படி அபிவிருத்தியாகுமாறு அவரவர்க்கு நீங்களுதவி புரிதல் வேண்டும். பிறர் நிச்சயமென உறுதியுடன் நம்பியிருக்கும் மேனோக்கங்கள் அவர்களை நல்வழிப்படுத்துவதாகமட்டுமிருந்தால், மற்றப்படி அவைகளெவ்வாறாயினும் அவற்றைப்பற்றி நிற்குமாறு உதவி புரிதலே நமது கடமையாகும். ஆதலின் நற்காரியங்கள் நல்விஷயங்களுக்கு ஏதுக்களாய் நிற்கும் காரணங்கள் யாவையென நீங்கள் தேடித்தெரிந்துகொள்ளுதல் வேண்டும். நம்மால் உதவியடையக் கூடியவர்களுக்கு உதவிகளைச்செய்தும், மற்றவர்க்கெல்லாம் நல்லெண்ணம் நற்பிரார்த்தனைகள் நாம் சதா நமது மனதால் அனுப்பிக்கொண்டும் இருத்தலே நமது

கடமை. ஆதலின் நாம் வாழுமிவ்வுலகத்தில் நிறைந்திருக்கும் அந்தகாரத்தை நீக்கிவிடும்கடமை பூண்டு அவ்வியற்கை கொண்ட சோதிக்கூட்டங்களாய் இடைவிடா உழைப்புடன் நாம் வாழ்ந்துவரல் வேண்டும்.

கடவுளது காரியமான ஜகத் ஸம்ரக்ஷணத்தில் நாம் பேருழைப் புள்ளவர்களாய் இருந்தாலன்றி பிரம வித்தையெனும் பேரறிவை ஆராய்பவர்களாக மாட்டோம். ஆகையினால் எங்கெங்கு துன்பமும் துக்கமும் செறிந்து நிற்கின்றதோ, எங்கெல்லாம் அநீதியும் கொடுமையும் விளங்குகின்றதோ, அங்கெல்லாம் இப்பிரமஞானத்தை கருத்துடனாராய்ந்து வரும் நமது மஹாஸபையின் உண்மையான அங்கத்தினர் காணப்படல்வேண்டும். ஏனெனில் பிரமஞான அறிவைத் தாம் ஆராய்ந்தபின் நம்மையும் மற்றவரையும் அந்தகாரத்தைவிட்டு சோதிக்கும் மரணத்தைவிட்டு மரணமில்லா நிலைமைக்கும், மாயையை விட்டு பாரமார்த்திகத்திற்கும் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்குமாறு நாம் அநுபவத்தில் உபயோகப்படுத்துவதற்கு அன்றோ உதவவேண்டியது. இவ்விதம் உலகின் துன்பத்தைத் தீர்க்குமாறு உழைத்து நன்மை வருவிப்போரே பரம பாக்கியசாலிகளாவார். அவர்களுக்கே கடவுள் பிரத்தியக்ஷ தரிசனமளிப்பார்.

இனி சபைக்குள்ளேயோ இதன் ஒரே நோக்கமாகிய சகோதரபாவம் சத்யமாய் விளங்கி வருவதாயிருத்தல் வேண்டும். உலகில் மானிடரைப் பிரித்து வேறுபடுத்திவிடும் விவகாரங்கள் பலவுளவன்றோ? இவை முன்னரே யிருத்தல் பற்றி யிவற்றை இன்னும் விருத்தி செய்யவேண்டியது அவசியமாகாது. ஆதலின் இந்த நமது சபையினுள், நம்மனைவரையும் மென்மேலபிவிருத்தி செய்து விடுதற்குதவும் உயர் நலமமைந்த வித்யாப்யாஸங்கள் மட்டும் தங்கியிருப்பதே மேன்மை.

(இன்னும்வரும்.) P. R. சுந்தரராஜய்யர்.

# * மரணம்.

மரணமென்பதை மூன்று விதமாக ஆராய்வோம்.

1; மரணம்என்றால் என்ன? 2, எதற்குமரணம்? 3, ஏன்மரணம்?

1. மரணமென்றால் என்ன?– பாழாகிய ஒரு வீட்டைவிட்டு அவ்வீட்டில் வசித்திருந்தமனிதன் புதிய வேறொரு வீட்டிற்குக்குடிபோவதுபோல், மனிதன் காணப்பட்ட இந்த ஸ்தூல தேகம் வாழ்நாட்களில் அநுபவிக்கக்கூடிய எல்லாவற்றையும் அநுபவித்து வார்த்தக்கியமடைந்து சோர்வுற்று யாதும் செய்யமுடியாமல் ஜீர்ணமடைந்தபிறகு வேறு புதிய தேகத்தைப்பெறுவதற்கு இதில் வசித்திருந்த ஜீவன் இதைவிட்டுப் பிரயாணப்பட்டு வெளிப்படுவதே மரணம் என்று காணப்படுகிறது. இதற்கு ஸ்தூலதேக மரணமென்று சொல்லலாமேதவிர ஜீவாத்மாவின் மரணமென்று சொல்லமுடியவில்லை. ஜீவாத்மா சூக்ஷ்மதேகத்துடன் வெளிப்படுகிறான் என்றே சொல்லலாம்.

இதை அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசமென்று ஐந்தாகப்பிரிக்கப்படுகிறது.

1. அன்னமயகோசம்:— ஸ்தூலதேகம்–திருசியம்.

2. பிராணமயகோசம்:—லிங்சரீரமும் பிராணனும்சேர்ந்தது. லிங்கம் ஸ்தூலத்தின் சரியான பிரதி, இது மிருகஸ்வரூபம் அதிருசியம்.

3. மனோமயகோசம்:—காமம் அல்லது ஆசை என்பதும் அசுத்தமனதும் சேர்ந்தது. அதிர்சியம் ஆனாலும் காமலோகத்தில் உருதரிக்கிறது.

4. விஞ்ஞானமயகோசம்:— சுத்தமனது.

5. ஆனந்தமயகோசம்:—ஆத்மாவும் புத்தியும் சேர்ந்தது குப்த சாஸ்திரம்.

* ஈரோடு பலிஜவாரு சங்கத்தில் ஸ்ரீமான், வி. எஸ். அருணாசலம்பிள்ளை யவர்கள் செய்யப்பட்ட ஓர் உபந்யாஸம்.

சூக்ஷ்மதேகமென்பது அந்தக்கரணம் 5 ஞானேந்திரியம் 5 பிராணன் 5, கன்மேந்திரியம் 5 ஆக 20 தத்துவங்கள் சேர்ந்தவையாய் ஞானநூல் சொல்கிறது. இவற்றைக்குறித்து முன் விவரித்துப் பேசியிருப்பதால் இங்கு பேசவில்லை. இனி ஸ்தூலதேக மரணத்தை ஆராய்வதில்—புதிய வீட்டிற்குப் போக பழய வீட்டிலிருந்து சம்பாதித்த சாமான்களையெல்லாம் சேகரம் செய்து மூட்டைகட்டிக்கொள்வதும், பிறகு அவற்றை எடுத்துக்கொண்டு புதிய வீட்டிற்குப்போவதுமாக இரண்டு செயல்களாய்வைத்துக்கொள்வோம். இதைப்போல் பழய வீடாகிய இத்தேகத்தை விட்டு லோகாந்தரம் போகும்போது இதிலுள்ள சூக்ஷ்மசரீர அவயவங்களையும், அவைகளின்வழியாய் சம்பாதித்த அநுபவங்களையும் சேகரம்செய்துகொள்வதும், பிறகு அவையுடன் வெளிப்படுவதுமாக இரண்டு செயல்கள் நடக்கின்றன. மரணம் நேரிடுவதில் மரணாவஸ்தையும் உத்கிராந்தி அவஸ்தையுமென இரண்டவஸ்தைகள் நடைபெறுகின்றன.

ஸ்தூலத்திலுள்ள கண் காது முதலியவற்றின் இந்திரிய சக்திகளையும், நாபி, மார்பு முதலியவற்றிலுள்ள பிராணன்களையும் ஜீவன் ஹிருதயத்தில் ஆகர்ஷித்து ஒருங்குசேர்ப்பிக்கும் அவஸ்தைக்கு மரணாவஸ்தை என்று பெயர்.

ஒரு சாதாரணமனிதன் மரணமடையும்போது முதலில் கன்மேந்திரியங்களும் பிறகு ஞானேந்திரியங்களும், ஒடுங்கிப் போய் மஹாமோஹமென்ற நிலையையடைகிறான். சுவாசம் ஆரம்பித்து இழுக்கும்போது இப்பிராணன்கள் ஒருங்குசேருகின்றன. இந்த நிலையில்தான் இந்த ஜன்மத்தில் செய்த துஷ்கர்ம சுகர்மங்களெல்லாம் ஏக காலத்தில் ஒன்றாகத் தோன்றி அவற்றின் பலப்ராப்திப்படி இனியெடுக்கப்போகும் ஜன்மத்தின் நிலையை அறிகிறான். இப்படி பஞ்சவாயுக்களும் ஒன்று சேர்ந்தபிறகு அந்தக்கரணத்துடன் ஜீவன் ஹிருதயகமலத்தை விட்டு பிரயாணப்பட்டு கண், காது, சிரசு முதலியவற்றின் வழிகளில் ஒன்றின் வழியால் வெளிப்படுகிறான். (இன்னும்வரும்.)

210802

# குறிப்புகளும், ஸமாசாரங்களும்.

## கோயமுத்தூர் ஜில்லாவின் 12-வது மஹாநாடு.

" கோவை ஜில்லாவிலுள்ள பிரமஞான சங்கங்களின் 12வது
. திரு . . நாடு சென்ற பிப்ரவரி மாதம் 27, 28 தேதிகளில் திருப்பூ
. . ன் கீழ் . . வாளர் ஸர். டி. ஸதாசிவய்யரவர்களின் அக்கிராசனத்
. . ராவ்ஸாஹிப் . . சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீமான்க. . . ராஜாராமையர்,
. . லாசாரி, வி. வ . . ஏஸ். வி. கனகசபைப்பிள்ளை, டி. வி. ராஜகோபா
. . கள், "குருநாதன் . . வேங்கடராமணய்யங்கார் முதலிய பெரியோர்
. . தம்", "அடியார் பெ . . வருகை", "இராமாயணம்", " மஹா பார
. . களைக் குறித்து சொ . . ருமை" முதலிய அரும் பெரும் விஷயங்
. . ளுள்ள ஸபை அங்கத்தின . . ப்பொழிவு நிகழ்த்தினார்கள். ஜில்லாவி
. . பொதுஜன உபந்நியாஸங்களு . . கள் . . . . யம் செ . . கிருந்தனர்.
திருப்பூர் லாட்ஜ் பிரசிடெண்டு . . . . தனர்
கவுண்டரும் மற்ற சகோதரர்களும
அங்கத்தினர்களுக்குத் தக்க மரி
செய்வித்தனர். மேற்கு தமிழ் ஜில்
வேலை செய்துவரும் உபந்யாஸகர் ஸ்ரீமா
ஐயரை தெலுங்கு ஜில்லாக்களுக்கு அனுப
இருக்கச் செய்ய வேண்டுமென்றும், அவரால்
பிரமஞானஸபை ஓங்கிவளருவதைப் பாராட்டியும
செய்யப்பட்டன. அடுத்த கான்பரன்ஸ் கோயமுத
துவதாக நிச்சயம் செய்யப்பட்டது.

* * *

கூடலூர் சேர்க்கை பிரம்ம வித்யா ஸபை தாரக சங்கங்
இவற்றின் கூட்டம் சென்ற மார்ச்சுமீ 27, 28வுகளில் திவான் பகதூர் ஸர். டி. ஸதாசிவ அய்யர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் சிறப்பாய் நடைபெற்றது.

* * *

நாளது எப்ரல்மீ 2ந்தேதிமுதல் 4வு முடிய அடையாற்றில் தென்னிந்தியாவின் பிரம்மஞான ஸபை மஹாநாடு வெகு சிறப்பாய் நடந்தேறியது. இத்தென்னாட்டின் . . . கிளைச் சபைகளிலிருந்தும் மெம்பர்கள் விஜயஞ் செய்திருந்தனர்.

டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்கள் இத்தேசத்தின் இராஜீயக் கக்ஷிகள் அனைத்தையும் ஒற்றுமைப் படுத்துவதன் நோக்கமாய் பம்பாயில் கூடும் மகாநாட்டிற்குப் போயிருக்கின்றனர். அங்கிருந்து சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு திரும்பிவர சில நாட்கள் செல்லுமென அறிகிறோம். ஸ்ரீமான் ஜி. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் தற்காலம் உதயகிரி மலையில் இருக்கின்றார். இருவரும் மேமீ முதல்தேதி வாக்கில் இ-லாந்துக்குப் பிரயாணமாவார்கள்.

*   *   *

## புஸ்தக வரவு.

கைங்கரிய முறை:—ஸ்ரீமான் ஜி. எஸ். அருண்டேல்
M.A., L.L.B, அவர்கள் ஆங்கிலத்தில் இயற்றியதை ஸகோதரர்
R. ஸ்வாமிநாதைய்யர் அவர்கள் ... ல தமிழில் மொழி பெயர்த்து
வெளி... கிறார் ... ந்த அனுஷ்டான நூலாகை
...தன்படி ஒழுகிவருவது மிகவும்
...ம. விலை 0—1—6.

...விலாஸ புஸ்தகசாலை,

எடமணல்,

சீர்காழிவழி.

---

## ஸ்ரீமத் பகவத்கீதை.

கிரந்தசுலோகமும் தமிழ் மொழிபெயர்ப்பும். எம்மதச்சார்புமின்றி ஸர்வமத சம்மதமாயும் மூலகிரந்தத்தை அனுசரித்ததாயுமுள்ளது. பிர்ம்மவித்தியா மஹாஸபையின் தலைவரான டாக்டர் அன்னிபெஸண்டு அம்மாள் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை அனுசரித்து, எனங்குடி ஸ்ரீமான் V. இராமச்சந்திர நாயுடு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. காலி...ா பைண்டுசெய்த பாக்கெட் ஸைஸ் விலை அணா 9. இன்னும் ...ஞானத் தமிழ்புஸ்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட...த்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

லாஸ.

சாந்திவிலாச புஸ்தகசாலை,
எடமணல், (சீர்காழி வழி).

---


## ...சேலைகள், பனியன்கள்
## கலர் ...ாம்ப & இங்குகள்.
## ரப்பர் ஸ்ட...

... கலர் சேலைகள்,
...சித்தாடைகளும்,
...வரையிலும் 18
...வும் விலை நய
...ஸ்பீரிய
...பனியன்... பிரபு...

இப்பவும் எங்களிடம் அ...
ரவிக்கைகள், தாவணிகள், இ...
சேலம் பனியன்கள் 1 முதல் ...
முதல் 40 இஞ்சு வரையிலும் நல்ல...
மாகவும் (ரப்பர் ஸ்டாம்பு), ரப்பர் ஸ்ட...
ராகவும் புளூபிளாக், றெட்டிங்க், பச்...
வெகு நாணயமாகவும் ஸுபீரியராகவும் ...
றோம். கமிஷன் யேஜண்டுகள் தேவை. ...
சாம்பிளும் விலை விபர லிஸ்டும் அனுப்புகிறோ...

(1) கலர் சேலைகள் சாயம் காரண்டி. சாயம் பே...
இனுமாய் சாயம் போட்டுக் கொடுப்பதுடன் அனுப...
கும் ஸ்டாம்பும் வைத்து அனுப்பிவிடுகிறோம். சர்...
உருப்படிகளை மருசாயம் போடவேணுமானால் வாங்கிய...
முதல் ஒரு மாதத்திற்குள் அனுப்பிவிடவேண்டியது.
கடந்து அனுப்பினாலும் எங்கள் சீல் இல்லாததை அனுப்பி...
லும் நாங்கள் ஜவாப்தாரியல்ல. ஒரு சேலைக்கு ஆர்டர் செ...
தால் பூரு பணமும் ரிஜிஸ்டர் பாக்கிங் செலவு அணா 0-10-0
சேர்த்து அனுப்பிவிட்டால் உங்களுக்கு M. O. கமிஷன் 0-2-0
லாயப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட சேலைகளுக்கு ஆர்டர்
செய்தால் அட்வான்ஸ் 4-ல் 1 பங்கு அனுப்பிவிட வேண்டியது. ஆர்டரில் கலர் நீளம். (அகலம் இவ்வளவு இஞ்சு) ரயில்வே பார்ஸல் அல்லது போஸ்ட் பார்சல் விபரமும் அட்ரஸ் விபரமாயும் யெழுதி அனுப்பவேண்டியது. இதர ஜவுளிகளும் நாணயமாயும் விலை நயமாயும் கிடைக்கும்.

சாக்குலெட் or பொடி, பிரவுன் or கெம்பு, புளூ or நீலம், காங்கு or கருப்பு, வயலெட் or ஊதா, ரோஸ், சிமிட்டு, காக்கி,